

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக செல்லும் போது புதுக்கோட்டை மாவட்டம் வடவாளம் ஊராட்சி காயாம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் கபடி பயிற்சியில் ஈடுபட்டிருந்த மாணவ, மாணவிகளை சந்தித்து அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் கலந்துரையாடினார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் உயர்வு!

மேட்டூர், ஜூலை 25 –

கர்நாடகாவில் தென்மேற்கு பருவமழை தீவிரமாக பெய்தது. இதன் காரணமாக அங்குள்ள கிருஷ்ண ராஜசாகர், கபினி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டது. இந்த 2 அணைகளும் நிரம்பியதை அடுத்து உபரிநீர் காவிரி ஆற்றில் தமிழகத்திற்கு வினாடிக்கு 70ஆயிரம் கனஅடிக்கு மேல் திறக்கப்பட்டு வந்தது.

கர்நாடக அணைகளில் திறந்து விடப்பட்ட தண்ணீர் ஒகேனக்கல் வழியாக மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. கடந்த 1 வார காலமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுவதால் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.




நேற்று முன்தினம் (23.07.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், பத்திரிகையாளர் நல வாரியக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை இணை செயலாளர் ஷ்ரவன் குமார் ஜடாவத், பத்திரிகையாளர் நல வாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினர்கள் ஆர்.எம்.ஆர்.ரமேஷ், பி.கோலப்பன், திருமதி லட்சுமி சுப்பிரமணியன், எஸ். கவாஸ்கர், எம்.ரமேஷ், அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல் முறையாக ஆன்லைனில் கட்டட அனுமதி பெறும் திட்டம்!

# நடுத்தர மக்களின் வீடு கட்டும் கனவு எளிதில் நனவாகும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு !

சென்னை, ஜூலை 25 -

தமிழ்நாட்டில் முதல் முறையாக தொடங்கப்பட்டுள்ள ஆன்லைனில் கட்டட அனுமதி பெறும் திட்டமானது, நடுத்தர மக்களின் வீடு கட்டும் கனவு எளிதில் நனவாக வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

இது குறித்து 23.07.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழகத்தில் முதல் முறையாக ஆன்லைனில் உடனடியாக கட்டிட அனுமதி பெறும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்துள்ளதால் நடுத்தர மக்களின், வீடு கட்டும் கனவு எளிதில் நனவாக வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் கட்டிட அனுமதிக்காக ஆன்லைனில் விண்ணப்பிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது. அதேபோல், உள்ளாட்சி அமைப்புகளிலும் ஆன்லைனில் அனுமதிக்காக விண்ணப்பிக்கும் நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்தாண்டு அக்.2ம் தேதி முதல் ஊராட்சிகளில் கட்டிட அனுமதிக்கு ஆன்லைனில் மட்டுமே விண்ணப்பிக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதையொட்டி பல்வேறு சலுகைகளையும் தமிழக அரசு அறிவித்தது.

தளப்பரப்பு குறியீட்டிலும், பணிமுடிப்பு சான்றிதழ் பெறுவதிலும் சலுகைகள் அறிவிக்கப்பட்டன. தமிழக அரசின் ஒருங்கிணைந்த வளர்ச்சி கட்டிட விதிகளின்


தினகரன்
ஜூலை 23, 2024 செவ்வாய்க்கிழமை
வரப்பிரசாதம்

அடிப்படையில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்துக்கு பணி நிறைவு சான்றிதழ் பெற்றால்தான் மின்சாரம், குடிநீர், கழிவுநீர் இணைப்புகளை பெற முடியும் என்ற நிலை உள்ளது. இதில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, அதிகபட்சம் 8 வீடுகள் அல்லது 750 சதுர மீட்டருக்குள் உள்ள கட்டிடங்களுக்கு பணி நிறைவு சான்றிதழ் பெற அவசியம் இல்லை. உயரமில்லா கட்டிடங்களுக்கான அதிகபட்ச உயரம் 12 மீட்டரில் இருந்து 14 மீட்டராக உயர்த்தப்பட்டது.

அதேபோல், 300 சதுர மீட்டர் வரையும், உயரத்தில் 14 மீட்டருக்கு மிகாமலும் கட்டப்படும் வணிக கட்டிடங்களுக்கும் பணி நிறைவு சான்றிதழ் வேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த பிப்ரவரி மாதம் தாக்கல் செய்யப்பட்ட தமிழக அரசின் பட்ஜெட்டில் 2,500 சதுர அடி வரை கட்டப்படும் குடியிருப்பு கட்டுமானத்துக்கு கட்டிட அனுமதி தேவையில்லை. பணி முடிவு சான்று பெற தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பட்ஜெட் அறிவிப்பை செயல்படுத்தும் வகையில், தமிழகத்தில் முதல் முறையாக கட்டிட அனுமதியை ஆன்லைனில் உடனடியாக வழங்கும் திட்டத்தை நேற்று தலைமைச் செயலகத்தில் நடந்த நிகழ்ச்சியில், முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ.541.32 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 4,184 புதிய அடுக்குமாடி குடியிருப்பு களை காணொலி காட்சி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் ரூ.382.84 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 1459 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகத்தையும் முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார். இத்திட்டத்தின் படி, ‘www.onlineppa.tn.gov.in என்ற இணையதளத்தில் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைன் மூலம் விண்ணப்பதாரர் அளிக்கும் விவரத்தின் அடிப்படையில் உடனடியாக அனுமதி வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட எந்த அலுவலகத்துக்கும் செல்ல வேண்டியதில்லை. கட்டடப் பணிகள் முடிந்ததும், முடிவுச்சான்று பெறுவதில் இருந்தும் விலக்களிக்கப்படுகிறது. பரிசீலனைக் கட்டணம், கட்டமைப்பு, வசதிக் கட்டணங்களில் இருந்து 100 சதவீதம் விலக்களிக்கப்படுகிறது. 2500 சதுரடி வரையிலான மனையில், 3500 சதுரடியில் கட்டப்படும் வீடுகளுக்கு இத்திட்டம் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வீடு அல்லது கட்டிடம் கட்டுவதற்கான திட்ட அனுமதி பெறுவது மிகவும் எளிதான தாகும். திட்ட அனுமதி பெறுதலில் உள்ள சங்கடம் மற்றும் கால தாமதம் ஆகியவை கடந்த கால செய்தியாகும். இப்போதுள்ள புதிய ஒழுங்கு முறையில், நீங்கள் திட்ட அனுமதியை விரைவில் பெறுவதை இத்திட்டம் உறுதி செய்துள்ளது. இதனால் நடுத்தர மக்களின், வீடு கட்டும் கனவு எளிதில் நனவாக வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், கீரனூரில் கந்தர்வக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அமைக்கப்பட்ட பேருந்து நிலைய தரைதளம் பணிகள் முடிவுற்ற நிலையில், மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில், கந்தர்வக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார். நிகழ்வில், நகர செயலாளர் வழக்கறிஞர் பி.அண்ணாதுரை, பேரூராட்சி தலைவர் ஜெயமீரா கே.எம்.கே.ரவிக்குமார், துணைத்தலைவர் எம்.ஏ.எம்.இம்தியாஸ் உள்ளிட்ட பேரூராட்சி கவுன்சிலர்கள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.ஆர். ஸ்டாலின், சின்னையா, தமிழினியன், எழில் ராஜா, உள்ளிட்ட நகர வட்ட கழக நிர்வாகிகள், பேரூராட்சி அதிகாரிகள், பொதுமக்கள், மாணவ, மாணவிகள் உடனிருந்தனர்.

# கடலூரில் 38 ஏழை மாணவர்களுக்கு ரூ.6 லட்சம் மதிப்பில் கல்வி உதவித் தொகை!

## கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன் வழங்கினார்!

கடலூர், ஜூலை 25 -

கடலூரில் விஷன் பவுண்டேஷன் சார்பில் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன் தலைமை தாங்கி கடலூரரைச் சேர்ந்த 19 ஏழை, எளிய பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் உட்பட 38 பேருக்கு 6 லட்சம் ரூபாய் கல்வி உதவித் தொகையினை கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன் வழங்கி பேசுகையில், விஷன் பவுண்டேஷன் சார்பில் கடந்த 15 ஆண்டுகளாக 1.38 கோடி ரூபாய் மதிப்பில் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இப்பணியை கோல்டன் சிட்டி அரிமா சங்க நிர்வாகிகள் இணைந்து செய்து வருகின்றனர்.

கல்வி உதவித் தொகை பெறும் மாணவ, மாணவிகள் பெற்றோரின் நிலை அறிந்து நன்றாக படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

மாணவர்கள், ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு இதுபோன்ற உதவிகளை செய்ய வேண்டும். வரும் காலங்களில் அதிக மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்க உள்ளோம் என்றார்.

இந்நிகழ்ச்சியில் டாக்டர் பிரவீன் அய்யப்பன், மாநகராட்சி கவுன்சிலர் பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் கோல்டன் சிட்டி அரிமா சங்க நிர்வாகிகள் சண்முகம், சேகர், மனோகர், கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதிபெருமாள், ஜெயராமன், விஜயன், சேதுராமன், முருகன், சதீஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கடலூரில் விஷன் பவுண்டேஷன் சார்பில் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன் தலைமை தாங்கி கடலூரைச் சேர்ந்த 19 ஏழை, எளிய பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் உட்பட 38 பேருக்கு 6 லட்சம் ரூபாய் கல்வி உதவித் தொகையினை கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் டாக்டர் பிரவீன் அய்யப்பன், மாநகராட்சி கவுன்சிலர் பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் கோல்டன் சிட்டி அரிமா சங்க நிர்வாகிகள் சண்முகம், சேகர், மனோகர், கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதிபெருமாள், ஜெயராமன், விஜயன், சேதுராமன், முருகன், சதீஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### நிபா வைரஸ் எதிரொலி :

# தேசிய நிபுணர்கள் குழு கேரளாவில் முகாம்!

திருவனந்தபுரம், ஜூலை 25 –

கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை பெய்ய தொடங்குவதற்கு முன்னதாகவே பல்வேறு காய்ச்சல்கள் மற்றும் தொற்று நோய்கள் பரவ தொடங்கின. இந்நிலையில் பருவமழை தீவிர மடைந்ததால் தொற்று நோய்களின் பாதிப்பு அதிகரித்தது.

அங்கு வழக்கமான காய்ச்சல்களான டெங்கு, டைபாய்டு, எலி மற்றும் பன்றி காய்ச்சல்கள் மட்டுமின்றி வெஸ்ட் நைல், ஷிகல்லா, அமீபிக் மூளைக்காய்ச்சல் உள்ளிட்ட அரிய வகை நோய்களும் பரவின. காய்ச்சல் பாதிப்புக்கு உயிரிழப்புகளும் ஏற்பட்டதால் மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டது.

இந்தநிலையில் மலப்புரம் மாவட்டம் பாண்டிக்காடு அருகே உள்ள செம்பரசேரி பகுதியை சேர்ந்த 14 வயது சிறுவன் கடந்த சில நாட்களுக்கு முன்பு நிபா வைரசுக்கு பலியானான். காய்ச்சலால் அவதிப்பட்டு வந்த நிலையில் கோழிக்கோடு அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவனுக்கு நிபா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் தீவிர சிகிச்சை அளித்தும் அந்த சிறுவன் பரிதாபமாக இறந்தான். இதையடுத்து நிபா வைரஸ் பரவலை தடுக்கும் நடவடிக்கையில் மாநில சுகாதாரத் துறை களமிறங்கியது. பலியான சிறுவனின் தொடர்பில் இருந்தவர்களின் பட்டியலை தயார் செய்தது.

குடும்பத்தினர், உறவினர்கள், அக்கம்பக்கத்தினர், நண்பர்கள் என 460 பேர் தொடர்பு பட்டியலில் இடம் பெற்றனர். அவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. அவர்களில் ஆபத்தான பிரிவில் 220 பேர் உள்ளனர். அவர்களை சுகாதாரத்துறையினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

தொற்று அறிகுறிகள் உள்ள 19 பேர் வெவ்வேறு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுகிறார்கள். சிறுவனுடன் தொடர்பில் இருந்தவர்களிடமிருந்து மாதிரி சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. நெருங்கிய உறவினர்கள் 17 பேருக்கான பரிசோதனை முடிவு நேற்று வந்தது. அதில் அவர்களுக்கு தொற்று பாதிப்பு இல்லாதது உறுதி செய்யப்பட்டது.

இந்த தகவலை மாநில சுகாதாரத்துறை மந்திரி வீணா ஜார்ஜ் தெரிவித்தார். மேலும் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் 21 நாள் தனிமைப்படுத்தலை தொடரவேண்டும் என்றும், நெறிமுறைகளை மீறுவோர் மீது பொது சுகாதார திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

இந்நிலையில் நிபா வைரஸ் பாதிப்பு உள்ள இடங்களில் ஆய்வு செய்வதற்காக புனேவில் உள்ள தேசிய வைராலஜி நிறுவனத்தை சேர்ந்த டாக்டர் பாலசுப்பிரமணியன் தலைமையினான நிபுணர்கள் குழு கேரளா வந்தது. அவர்கள் தொற்று பாதித்த பகுதியில் வவ்வால்களின் மாதிரிகளை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் புனே வைராலஜி நிறுவனத்தில் இருந்து ஒரு மொபைல் பரிசோதனை வாகனம் கோழிக்கோட்டுக்கு வந்துள்ளது. அந்த வாகனத்தில் தொற்று அறிகுறிகள் உள்ளவர்களிடமிருந்து சேகரிக்கப்படும் மாதிரிகளை உடனடியாக பரிசோதனை செய்ய பயன்படுத்தப்பட்டு வருகிறது. காய்ச்சல் பரவலை கண்காணிக்கும் விதமாக கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழுவினர் அனக்காயம் மற்றும் பாண்டிக்காடு ஊராட்சிகளில் 7ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு சென்று காய்ச்சல் பாதிப்பு பற்றிய தகவல்களை சேகரித்துள்ளனர்.

அனக்காயம் ஊராட்சியில் 95 குழுக்களும், பாண்டிக்காடு ஊராட்சியில் 144 குழுக்களும் தொடர்ந்து கண்காணித்து வருகின்றன. அது மட்டுமின்றி இந்த 2 ஊராட்சிகளிலும் 18ஆயிரம் வீடுகளில் சுகாதார பணியாளர்கள் ஆய்வு செய்திருக்கின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன். கலியமூர்த்தி

ஜூலை 25 (2011)



பூதலூர் ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புற பணியாற்றியவர்.

தஞ்சை மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.


பூதலூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், கூட்டுறவு நிலவள வங்கி இயக்குநர், தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் ஆகிய பொறுப்புகளையும் திறம்பட வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மயிலை இரா. காசிச்சாமி

ஜூலை 25 (1992)



தூத்துக்குடி மாவட்டத்தில் பிறந்த இவர் சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றில் தீவிரமாய் பணியாற்றி, கழகம் துவக்க காலம் முதல் கழகப் பணியாற்றத் தொடங்கினார். 1952 முதல் சென்னை மாவட்டத்தில் கீழ்ப்பாக்கம் பகுதியிலும் பின்னர், மயிலை பகுதியில் தனது இறுதிநாள் வரை கழகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும், ஈழத்தமிழர் பாதுகாப்பு போராட்டத்திலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

1968ஆம் ஆண்டு மயிலை பகுதி, 94வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் தொடர்ந்து மயிலை வார்டு குழுத் தலைவராகவும் சிறப்பாக பணியாற்றி பொதுமக்களிடம் பாராட்டைப் பெற்றவர்.

இவர் பகுதிக் கழகப் பொறுப்பாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

தமிழ்நாடு வணிகர்களின் மத்தியில் கழக உணர்வை வளர்த்து அதனடிப்படையில், தமிழ்நாடு வர்த்தக கழக பொதுச்செயலாளர் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் “மயிலையில் கழகம் வளர்த்த சிங்கம்” என பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.